மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 105/2022**

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் தேதி திங்கட்கிழமை

(2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது)

பி.வா.சா.3 (அங்காள ஈஸ்வரி)

கு.வி (வாதிகள் தரப்பில்)

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. 2ம் பிரதிவாதி கருப்பசாமி, 4ம் பிரதிவாதி அழகச்சி எனது உறவினர் என்றால் சரிதான். எனது கணவர் சின்னத்துரை 05.06.2016ல் கிரையம் வாங்கிய சொத்து எங்கு உள்ளது என்றால் மேலராங்கியத்தில் உள்ளது. மேற்படி கிரைய சொத்து எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் கருப்பசாமியும், அழகச்சியும் எங்கள் வீட்டில் வைத்து எழுதினார்கள். மேற்படி சொத்து எத்தனை செண்ட் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சர்வே எண். 126/4 கொண்ட சொத்து மார்க்கண்டேயனுக்கு பாத்தியமானது என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண்.126/4 மார்க்கண்டேயனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என காட்டுவதற்கு வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. பத்திர அலுவகத்தில் பதிவு செய்யப்படாமல் வெண்ணிலை கிரையமாக வாங்கிய சொத்து பாகம் பிரிக்கப்படாத சொத்து என்பதால் அதை கிரையம் வாங்கியது தவறு என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை வெண்ணிலை கிரையமாக நான் வாங்கியதால் இந்த வழக்கில் 8ம் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 2ம் பிரதிவாதி கருப்பசாமி, 4ம்பிரதிவாதி அழகச்சி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை